
# திராவிடத்தால் வாழ்கிறோம்

781

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## மாநாடு

ர.பிரகாசு

55

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

# விடுதலைப் போர்முழக்கம்!

*"சீமான்களும் பூமான்களும் அல்ல, இந்த மாநாட்டைக் கூட்டியோர். எனினும் கழகத்தார் நெஞ்சுறுதியோடு இவ்வளவு பெரிய மாநாட்டைக் கூட்டியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் பொதுமக்களின் ஆசி. நமது கொள்கை உறுதி! இதனையறியாத வெறியர்கள் பல பலச் சொல்லி ஊளையிடலாம். இனி ஊளைகள் நில்லாது, உழைப்பே வெல்லும்."*

*இது 1954-ஆம் ஆண்டு நடைபெற்ற, 'சேலம் மாவட்ட தி.மு.கழக 2-வது மாநாடு' குறித்து 'திராவிட நாடு' ஏட்டில் வந்த செய்தி. அந்த எழுச்சிமிகு மாநாடு நடைபெற்றது மே 2, 3 ஆகிய தேதிகளில். மார்க்கெட் மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த கொட்டகை நிரம்பி, இருவண்ணக் கொடிகள் எங்கும் பறந்தன. மாநாட்டுத் திடலின் ஓரிடத்தில் சேலத்தின் நிலப்படம் வரையப் பட்டிருந்தது. அதில், அங்கிருந்த ஊர்கள், ஆறுகள், தொழில்களைப் பற்றிய குறிப்புகள் இருந்தன. அத்தோடு, தி.மு.கழகத்தின் கிளைக்கழகம் எங்கெல்லாம் இருந்ததோ அவற்றையும் குறிப்பிட்டிருந்தார்கள். கழகத்தின் வளர்ச்சி வியக்கச் செய்தது.*

*முதல் நாள் சமூக சீர்திருத்த மாநாட்டுக்கு ப.உ.சண்முகம் தலைமை வகிக்க, வழக்கறிஞர் பு.ரா.கோகுலகிருஷ்ணன் தொடங்கி வைத்தார். இரண்டாம் நாள் அரசியல் மாநாட்டுக்கு வழக்கறிஞர் இரெ.இளம்வழுதி தலைமை வகிக்க, மதுரை எஸ்.முத்து தொடங்கிவைத்தார். பேரறிஞர் அண்ணாவின் 'காதல் ஜோதி' மற்றும் 'ஓர் இரவு' நாடகங்களை நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.இராமசாமி நடத்தினார்.*




*கறுப்புச்சட்டையோடு எப்போதும் தோற்றமளிக்கும் சேலத்தைச் சேர்ந்த பெரியவர் ஜி.பி.சோமசுந்தரம், "ஆணையிடுங்கள்! செய்து முடிக்கிறோம். அறப்போரா? தயங்க வில்லை! அடக்குமுறைகளா? கவலையில்லை எமக்கு! கழகத்தைக் கோட்டையாக்கும் காரியங்களை ஆற்றத் தயங்காதவர்கள் நாங்கள்" என வரவேற்புரையிலேயே இளைஞர் களைச் சுண்டி இழுத்தார். இரண்டாவது நாள் அரசியல் மாநாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் பேசியபோது, "நம்மை இழித்துப் பழித்து ஏசிப் பேசித் திரியும் வடநாட்டார் களிடமிருந்து நாம் விடுதலை பெற போர் முழக்கம் செய்து வருகிறோம்'' என்று முழங்கினார்.*

*இறுதியில் பேசிய அண்ணா, "சாதாரணமானவர்கள் நாங்கள். குலத்தாலோ, பணத்தாலோ நாங்கள் உயர்ந்தவர்களா என்றால் இல்லை. அரசியலிலாவது காந்தியாரின் வாரிசு என்ற பெருமையை நேரு பெற்றிருக்கிறார். ஆனால் நானோ, எனது தம்பி மார்களோ அத்தகைய பெருமையையாவது நம் தலைவரிடமிருந்து (பெரியாரிடம்) பெற்றிருக் கிறோமா என்றால், அதுவும் இல்லை. இந்த நிலையில் இருக்கிற நம்மை இன்னமும் பல்லிழந்த நரிகளும் ஓநாய் களும் கேலி பேசுகின்றன" என கழகம் எதிர்கொண்டிருந்த நெருக்கடி களைப் பேசினார்.*

*மும்முனைப் போராட்டத்திற்கு பிறகே இந்த நெருக்கடிகள் வேகமெடுக்கத் தொடங்கின. காரணம், அடித்தட்டு மக்களை அலை அலையாய் கழகத்தின் பக்கம் திருப்பியது அந்தப் போராட்டம். 'காங்கிரஸ்', 'தமிழரசுக் கட்சி' போன்றவை மட்டுமல்ல, 'ஹிந்து', 'சுதேசமித்திரன்', 'தினமணி', 'கல்கி', 'ஆனந்த விகடன்', 'தினத்தந்தி' எனப் பல ஏடுகளும் தி.மு.க.-வை கடுமையாக எதிர்த்தன. ஆனாலும், எளியோருக்கான, இளையோர் இயக்கமாகத் துடிப்போடு தி.மு.கழகம் வளர்ந்தது என்பதை வரைபடத்திலும், வரலாற்றிலும் பதிவுசெய்தது சேலம் மாநாடு.*

**...கூட்டம் திரளும்**

## பொருளாதாரக் குறியீடுகளில் தமிழ்நாடு!

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் சமூக நலத் திட்டங்கள், பா.ஜ.க. உள்ளிட்ட வலதுசாரிகளுக்குக் கண்ணை உறுத்தி வரும் நிலையில், அதேபோன்ற கருத்தை 'இன்ஃபோசிஸ்' நாராயணமூர்த்தியும் சமீபத்தில் உதிர்த்துள்ளார். 'எந்த நாடும் இலவசங்கள் கொடுத்து, வறுமையை ஒழித்ததாக வரலாறு இல்லை. வேலை வாய்ப்புகளைப் பெருக்குவது மட்டுமே வறுமையை ஒழிக்க இயலும்' என்கிற அவரது கருத்து கடும் விமர்சனங்களைச் சந்தித்து வருகிறது.

எழுத்தாளர் ஸ்ரீதர் சுப்பிரமணியன், தனது முகநூல் பதிவில் நவீன பொருளாதார வளர்ச்சி குறித்து, அபிஜித் பானர்ஜி எழுதிய 'Poor Economics' என்கிற நூலையும், டச்சு வரலாற்று ஆய்வாளர் ரட்கர் பெர்க்மேன் எழுதிய Utopia for Realists என்கிற நூலையும் குறிப்பிட்டு, தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் சமூக நலத் திட்டங்கள் சர்வதேச கண்ணோட்டத்துடன் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக உள்ளதை விளக்கி உள்ளார். 'வறுமை ஒழிப்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட நாடுகளில் பொருளாதார முன்னேற்றங்களும், அந்தந்தச் சமூகங்களில் கல்வி மற்றும் மருத்துவக் குறியீடுகளும் மேம்பட்டிருக்கின்றன' என்று ஆய்வுகள் குறிப்பிடுவதைச் சுட்டிகாட்டி இருக்கிறார்.

"தமிழ்நாட்டில் இருந்தும் இதற்கான தரவுகளைக் கொடுக்க இயலும். மனித வளக்குறியீடுகள், ஐ.நா. சபையின் வளர்ச்சி அறிக்கைகள் போன்றவற்றில் எல்லாம் தமிழ்நாடு பல்வேறு குறியீடுகளில் டாப்-5-இல் இருக்கிறது. தொழில் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி போன்றவற்றை மட்டுமே கருத்தாகக் கொண்டு இயங்கி வரும் குஜராத் இப்படி எந்த மனிதவளக் குறியீட்டிலும் முன்னணியில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவற்றைப் படித்த பின்னர் வறுமை ஒழிப்பு குறித்த உங்கள் பார்வை கண்டிப்பாக மாற்றமடையும் என்று உறுதியாக நம்புகிறேன்" என்கிற அவரது பதிவு பலரையும் கவனிக்க வைக்கிறது.

## ஃப்ளாஷ்பேக்



### வெற்றிக்கொடி நாட்டிய கழகத்தினர்!



குளித்தலை சிவராமன்

1986-ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்ற போதிலும், தமிழ்நாடு முழுவதும் 310 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மேல் தி.மு.க.வினர் வெற்றிக் கொடியை நாட்டினார்கள். நான் அப்போதைய திருச்சி மாவட்டம், குளித்தலை ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக தேர்வு செய்யப்பட்டேன். பெருந்தலைவர் என்பது நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பதவியாகும். 26.2.1986 அன்று திருச்சி, தில்லை நகரில் உள்ள 'முல்லை' திரையரங்கில் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக வெற்றி பெற்றவர்கள் அனைவரும், வெற்றி பெற்றதற்கான சான்றிதழை, முத்தமிழறிஞரிடம் காண்பித்து வாழ்த்துப் பெற்றோம். பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள், அன்பிலார் ஆகியோர் உடன் இருந்து வாழ்த்தினார்கள்.

**– குளித்தலை சிவராமன், செயற்குழு உறுப்பினர், கரூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## பாசறை படிப்பகம்

கௌதம் ராஜ்

55

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# அண்ணா அளித்துள்ள வாளும் கேடயமும்..

*மும்மொழிக் கொள்கை என்ற பெயரில், நம் மீது திணிக்கப்படும் இந்தியை நாம் எதிர்க்கும் போதெல்லாம், இது இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டிற்கு உகந்ததல்ல என்ற ஈட்டி, நம் மீது ஏவப்படுகிறது. இன்று நேற்றல்ல, இந்தித் திணிப்பை நாம் எதிர்த்த சமயங்களில் எல்லாம், நம் மீது 'பிரிவினை வாதிகள்' என்ற வீண்பழி சுமத்தப்பட்டே வந்துள்ளது. இதனை எதிர்கொள்ள நமக்கான கேடயத்தை மட்டுமல்ல, பழியை எதிர்த்து போரிட வாளையும் வழங்கிச்சென்றுள்ளார் பேரறிஞர் அண்ணா.*

*இரண்டு வெவ்வேறு கால கட்டத்தில், பேரறிஞர் அண்ணா ஆற்றிய முக்கியத்துவம் வாய்ந்த உரைகள் தொகுக்கப்பட்டு, நூலாக்கம் பெற்றுள்ளன. தமிழ் இணைய நூலகத்தில் இவை பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.*

*இந்தி எதிர்ப்பு முதற்போரில் மூலமுழக்க மிட்ட முப்பெருந்துறவிகளில் ஒருவரான அருணகிரி அடிகளார் தலைமையில், 1957-ஆம் ஆண்டு திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் அண்ணா ஆற்றிய எழுச்சிமிக்க உரை 'இந்தி எதிர்ப்பு ஏன்?' என்ற தலைப்பிலே நூலாக வெளியாகி நமக்கான வாளாக திகழ்கிறது.*




*கேடயமாக, ஜனவரி 23, 1968-இல் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இருமொழிக் கொள்கைத் தீர்மானத்தையொட்டி பேரறிஞர் அண்ணா ஆற்றிய உரை, 'இந்திக்கு இங்கே இடமில்லை' என்ற தலைப்பில் நூலாக்கம் பெற்றுள்ளது.*

*15 உறுப்பினர்களோடு முதல்முறையாக சட்டமன்றத்தை அலங்கரித்த போதும், ஆட்சிப் பொறுப்பேற்று ஆளுங்கட்சியாக இருந்தபோதும், கழகத்தின் கொள்கையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்பதற்கு, இந்த இரண்டு நூல்களும் சாட்சியங்களாக இருக்கின்றன.*

*இணைப்புமொழி என்றால் ஆங்கிலம் போதும், ஆட்சிமொழி என்றால் அரசமைப்புச் சட்டத்தின் 8-வது அட்டவணையில் இருக்கும் 22 மொழிகளுக்கும் அந்த அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும், இந்தி ஆதிக்கத்திற்கு ஒருநாளும் இங்கே இடமில்லை, மீறி நுழைக்கப்பட்டால் களத்தில் இறங்கிப் போராட நாம் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்பது, வரலாறு நெடுக தி.மு.கழகத்தின் தீர்க்கமான முடிவாக இருந்து வருகிறது.*

*இந்தித் திணிப்பு என்ற அச்சுறுத்தல் சூழ்ந்தபோதெல்லாம் ஒட்டுமொத்த தமிழ்நாடும் ஓரணியில் திரண்டு மொழி உரிமைக்காக குரல் எழுப்பியுள்ளது என்பதை, இந்த இரண்டு நூல்களில் உள்ள செய்திகளும் நமக்கு தெரியப்படுத்துகின்றன. பல்வேறு அரசியல் முரண்பாடுகள் இருந்தபோதிலும், 1956-ஆம் ஆண்டு 'கேர்' தலைமையில் நியமிக்கப்பட்ட அலுவல் மொழி ஆணையத்திடம் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, ராஜாஜி, பி.டி.ராஜன், ம.பொ.சி., நாவலர் என பெருந்தலைவர்கள் ஓரணியில் திரண்டு, இந்திக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைத்த செய்தியும் இந்நூலில் இடம்பெற்றுள்ளது.*

*"உரிமைகளைப் பெறுவதற்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று வேட்டு முறை; மற்றொன்று வோட்டு முறை; இதில் முதல் வழியிலே எனக்கு நம்பிக்கை இல்லை; இரண்டாவது வழியான 'வோட்டு' முறை யிலேதான் நாம் உரிமைகளைப் பெறவேண்டும். அந்த வழிதான் வெற்றியைத் தரும்" என்றார் பேரறிஞர் அண்ணா. அப்படி மாபெரும் ஜனநாயக இயக்கமான தி.மு.கழகத்திற்கு, இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பது, எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று என்பதை அறிந்துகொள்ள இவ்விரு நூல்களும் வாளும் கேடயமுமாக நின்று துணை புரியும்..*

**...வாசிப்போம்.**

## கருவூலம்

### மாநாட்டுத் திட்டமிடல்!

1956-ஆம் ஆண்டு மே மாதம் 17, 18, 19 மற்றும் 20 தேதிகளில் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு திருச்சியில் நடைபெறுவதற்கான பணிகளுக்கு நிதி திரட்டும் நிகழ்ச்சி, 1955 டிசம்பரிலேயே தொடங்கிவிட்டது. 1956-ஆம் ஆண்டு ஜனவரி 29-ஆம் தேதி, சிதம்பரத்தில் கூடிய பொதுக்குழு, மாநாட்டுக்கான தேதிகளை நிர்ணயித்து, தீர்மானம் நிறைவேற்றியது. மாநாட்டுக்கான அலுவலகம் 1956-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் வாரத்திலேயே இயங்கத் தொடங்கியது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No. 1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131